an International CBSE Finger Print School
Coimbatore

# உறவுமுறைக் கடிதம்

14. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு திறன்பேசி பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்றனை எழுதுக :-

விடை

156, கம்பன் தெரு,
பரங்கிமலை,
சென்னை - 16.
25-05-2021.

அன்புள்ள தங்கைக்கு,

நலம், நலமறிய ஆவலாக உள்ளேன். புதிதாக திறன்பேசி ஒன்றை வாங்கியுள்ளதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. எனினும் அதனைப் பயன்படுத்தும் போது சில சங்கடங்களைத் தவிர்க்க சில அறிவுரைகளைக் கூறலாம் என்று நினைத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

தற்காலத்தில் இளைஞர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு பயனாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு சவாலாகவும் உள்ளது இந்த திறன்பேசி. வலைதளங்களைப் பயன்படுத்தித் தேடல், உரையாடல், பதிவேற்றம், பதிவிறக்கம் இவற்றை நாம் எளிதில் செய்யமுடிகிறது. அதில் பல நன்மைகளும், சிலத் தீமைகளும் உள்ளன.

அறியாத ஒருவருடன் முகநூல் தொடர்பு நட்பையும் வளர்ப்பது ஆபத்தை விளைவிக்கும். புகைப்படங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வது பெண்களுக்குப் பல தொல்லைகளைத் தரும். புலனத்திலும் , முகநூலிலும் பகிர்வு செய்யும் தகவல்கள் பொய்யானதாக இருந்தால் சட்டரீதியான பிரச்சனைகள் வரும்.

திறன்பேசிகளில் சேமிக்கப்படும் விவரங்கள் இணையத் திருடர்களால் களவாடப்பட வாய்ப்புள்ளது. எனவே கவனம் தேவை. சில விளையாட்டுகள் படிக்கும் மாணவர்களை எந்த நேரத்திலும் இணையத்தில் மூழ்கச் செய்கின்றன. இவைகள் கண் பார்வை பாதிப்பு, நரம்பு பாதிப்பு, தூக்கமின்மை, மறதி ஆகியவற்றை உண்டாக்கும். அறிவார்ந்த தேடலுக்கே நாம் திறம்பேசியைப் பயன்படுத்த வேண்டும். நீயும் அவ்வாறே பயன்படுத்துவாய் என நம்புகிறேன். எனது வாழ்த்துகள்.

இப்படிக்கு,
உன் அன்பு அண்ணன்,
வி.கதிர்.

உறைமேல் முகவரி :
ரா.செல்வி,
22, தெற்கு கடைவீதி,
திருநெல்வீதி - 02.

15. **நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக :-**

விடை

27, பாரதி நகர்,
பாளையங்கோட்டை.
25-05-2021.

அன்புள்ள நண்பனுக்கு,

வணக்கம். நலம், நலமறிய வெகு ஆவலாய் உள்ளேன். சென்ற வாரம் நான் ஓர் இனிய நூலைப் படித்தேன். அதன் பெயர் திருக்குறள்

வினாடி-வினா. நாம் எத்தனையோ குறள்களையும் அதன் பொருளையும் படித்திருக்கின்றோம். ஆனால் மறந்து விடுகிறோம். அவற்றை நினைவுபடுத்திக் கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

வினாவும் விடையும் ஓரிரு வரிகளில் கொடுத்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக வினா: உலகு ஆதி பகவனை முதலாக உடையது எது போல? விடை: எழுத்து எல்லாம் அகரத்தை முதலாக உடையது போல. எது செய்யாமல் செய்த உதவிக்கு நிகராகா? என்ற வினாவுக்கு வையகமும் வானகமும் நிகராகா என்பது விடை.

இவ்வாறு திருக்குறள் கருத்தை புதிய கோணத்தில் படிப்பது மகிழ்ச்சியாகவும், பொழுது போக்காகவும் இருக்கிறது. அத்துடன் அறிவு வளர்ச்சியும் ஏற்படுகிறது. இதனைப் புலவர் தென்குமரனார் என்பவர் எழுதியுள்ளார். இந்நூலில் சுமார் 2000 வினாடி வினா விடைகள் உள்ளன. இந்த நூலின் விலை ரூ.20 மட்டுமே. உங்கள் ஊர் கடையிலும் கிடைக்கும், வாங்கிப் படி; இல்லையேல் எனக்கு எழுது, நான் வாங்கி அனுப்புகிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம்.

நன்றி

இப்படிக்கு,
உன் உயிர்த்தோழன்,
கு.மோனிசு.

உறைமேல் முகவரி
ச.நரேஷ் குமார்,
8, கிழக்குமாடவீதி,
தல்லாகுளம்,
மதுரை